தனிப்பிரதி 1 அணா ஆண்டு சந்தா ரூ. 5. **REGD. NO. M. 4455.**

# திராவிடநாடு

ஞாயிறு வெளியீடு.

ஆசிரியர்.
C. N. அண்ணாதுரை M. A.

"எளிமையினால் ஒரு தமிழன் படிப்பில்லை என்றால்
இங்குள்ள எல்லோரும் நாணிடவும் வேண்டும்!"
[கவி பாரதி தாசன்]

மலர் 1. || காஞ்சிபுரம் 21—6—42 சித்திரபானு—வைகாசி 7—ஞாயிறு || இதழ் 16

## புதுப்போர் ஆரம்பமாம்!

— பரதன் —

> புத்திக்குப் புளிக்கும்!
> மூளைக் கோளாறு!
> நெருப்பே சுடாதே!

"புதுப்போர் ஆரம்பம்மே! புண்ணியக் காந்திமகானின் கண்ணிய மூளையில்
உதித்திட்ட புதுப்போர் ஆரம்பம்மே
புத்திக்கும் யுக்திக்கும் புளித்திடும்
சக்திக்கும் ஜயத்துக்கும் கசந்திடும்"

ஆர்மோனியக்காரர் அலற, தபலாக்காரர் திணற, காலரிக்காரர் கைதட்ட,

பூ ங் கா வினை தம்மே

என்று அடிவயற்றிலிருந்து எடுத்து, அழுத்தி, முன்பு, சுப்பையா பாகவதர் பாடுவாரே, தோழர்களிலே பலர்கேட்டிருப்பீர்கள்! அதைப்போல, வீரன்,

புதுப் போர் ஆரம்பம்மே

என்று பாடிக்கொண்டே, என் அறைக்குள் நுழைந்தான். "இது என்ன வீரா, பாடலும் ஆடலும்" என்று நான் கேட்டேன். பதில் கூறினானா? இல்லை! பாடினான்,

புண்ணிய காந்தி மகானின்
கண்ணிய மூளையிலுதித்திட்ட
புதுப்போர் ஆரம்பம்மே

என்று பாடினான், அசல் சுப்பையா போலவே. நான் சிரிக்காமலிருக்க முடியுமோ!

புத்திக்கும் யுக்திக்கும் புளித்திடும்,
சக்திக்கும் 'ஜயத்துக்கும் கசந்திடும்

என்ற அடிகளை, அவன் அழுத்தந் திருத்தமாகப் பாடியபோது, என்னையும் அறியாது நான் தாளம் போட்டேன். பிறகு கேட்டேன், "இது என்ன வீரா? பாடல்! ஏன் இந்த நையாண்டி செய்கிறாய்" என்று. "நையாண்டியா இது? காந்தியார், வெள்ளையரை விரட்டி, நாட்டுக்குச் சுயராச்சியம் வாங்கித்தர இப்போது புதிய போர் துவக்கிவிட்டது உனக்குத் தெரியாதோ" என்று கூறிவிட்டு, அதே பூங்காவினைத மெட்டிலே,

வீதியிலே வந்திடும்,
வெள்ளையரைக் கண்டும்மே,
வினயமாக கைகூப்பி
விளம்பிடுவோம் நின்றுமே,
போய்வருவீர் துரைமாரே
போவீர் உமதூருக்கே,
என்று உரைத்திடவேண்டும்
பின்னர் நின்று நிலைத்திடும்
நற்சுய ராஜ்யம்,
(புதுப்போர் ஆரம்பம்மே)

என்று, பாடினான். சிரித்தேன். பின்னர் கூறினான். "ஆமாமப்பா! வீதியிலே எந்தவெள்ளைக்காரரை யாவது கண்டால், உடனே, கோபிக்காமல், முகத்தைச் சுளித்துக்கொள்ளாமல், புன்சிரிப்புடன், கைகூப்பி நின்று. "ஐயா வெள்ளைக்காரரே! அடியேன் கூறுவதைக்கேளும். இனி நீர்இந்த நாட்டைவிட்டு வெளியே போய்விடும்." என்று கூறவேண்டும். இவ்வளவே தான்! கத்தியில்லை, இரத்தமில்லை, காசுபணம் செலவுமில்லை! போய்விடு என்று சொன்னதும், வெள்ளையன், "சரிதான்! நான்போகிறேன்!" என்று கூறிக்கொண்டு, அடுத்த கப்பல் புறப்படும் தேதிவரை, துறைமுகத்திலே சென்று தங்கிவிடுவான்! இரண்டோர் மாதங்களிலே எல்லா வெள்ளைக்காரர்களும் இந்த நாட்டைவிட்டுப் போய்விடுவார்கள், சுயராஜ்யம் உதயமாகிவிடும். இது காந்தியார் இப்போது வகுத்துள்ள புதிய போர் முறை" என்று வீரன் விளக்கினான்.

காந்தியார், புதுப்போர் துவக்கப்போகிறார், வார்தாவிலிருந்து வெளிவரப்போகிறது ஓர் திட்டம், கண்டோர் கலங்குவர், கேட்டோர் திடுக்கிடுவர், இந்தப்புதிய இரகசிய ஆயுதத்தை, மௌலானா அசாத்

## ஆரஞ்சுரச ஆபாசம்! அரபிக்கடலிலே பிணம்! சீதைக்கு அழைப்பு!

துக்கும் பண்டித ஜவகருக்கும் காந்தியார் காட்டினார், என்று இரண்டோர் வாரங்களாக பத்திரிகைகளிலே வெளிவந்தது. நானோ ஆச்சாரியாரின் அதிர்வேட்டுகளைக் கேட்டு, இப்படியும் ஒருகாலம் வருமா! என்றெண்ணி ஆச்சரியப்பட்டுக்கொண்டிருந்ததால், காந்தியின் போர் விஷயமாகச் சிந்திக்கவே நேரமில்லாது போயிற்று. ஆனால் வீரன் விளக்கிய பிறகு, பத்திரிகைகளைப் பார்த்தேன், உண்மைதான், புதிய போர்த்திட்டம் போடப்பட்டிருந்தது. வெள்ளைக்காரரைக் கண்டதும் கையெடுத்துக்கும்பிட்டு, வெளியே போய்விடுங்கள் என்று கூறிவிடுவதுதானாம்! பாரும் தோழரே, மகாத்மாவின் மூளை பிரசவித்த இந்த அபூர்வ யோசனையை! இதனைத்தொட்டிலிடும் பத்திரிகைகளும், லாலி பாடும் பிரசாரகர்களும், இல்லை என்று எண்ணாதீர்கள். இருக்கிறார்கள்! இந்தப்புதிய போரிலே, காங்கிரஸ் மட்டுமல்ல, யார்வேண்டுமானாலும் சேர்ந்துகொள்ளலாம்!

எவ்வளவு இலகுவாக, எளிதாக, விரைவாக, சுயராஜ்யம் பிறக்கும்வழி கிடைத்துவிடுகிறது பாருங்கள்! "போய்விடு" என்று கூறவேண்டியதுதான், உடனே வெள்ளைக்காரன் போய்விடுவான், சுயராஜ்யம் பிறந்துவிடும். "அறுபது வயதுக்குமேலான: அந்தராத்மாவின் தோழரின் மூளையிலிருந்து வெளிவந்துள்ளது இந்த அழகிய யோசனை! அழுகிய யோசனை என்று கூறிவிடாதீர்கள்! யாராவது சாதாரண ஆத்மா சொன்னால், அழுகிய யோசனை, பித்துக்கொள்ளித்திட்டம், என்று தூற்றலாம், மகாத்துமா சொல்லுகிறாரே, அவரைத்தூற்றலாமா, கண்டிக்கலாமா? 1942ம் ஆண்டிலே, பகுத்தறிவுப்பாலுண்டு பாரிலுள்ளவர்கள் விஞ்ஞான வீதியிலே விளையாடி, வீரராய், தீரராய், புத்துலகக்காவலராய் இருந்திடும் போக்கைக் கண்டுவரும் நாளினிலே, சாவடிக்காரனும் கைகொட்டி நகைத்திடும் சத்தற்ற பேச்சை, தீரமாகத், துணிவாக, ஒரு தலைவர் கூறுகிறார் என்றால் நாட்டின் வளம், மக்கள்வளம், என்னவிதமாக இருக்கிறதென்பதை விவரிக்கவும் வேண்டுமோ?

வடநாட்டிலே நல்ல டாக்டர் கிடைக்கவில்லையானால், இந்த வயோதிகரின் மூளையைப் பரீட்சிக்க, வெளியேயிருந்தாகிலும் ஒரு நல்ல டாக்டரை வரவழைக்கக்கூடாதோ? மூளையிலே கோளாறு எவ்வளவு முற்றியிருக்கவேண்டும் இத்தகைய மோசமான திட்டம் வகுக்க!

நெருப்பே சுடாதே! நீரே குளிர்ச்சியாக இராதே! காற்றே வீசாதே! என்று யாராவது கூறிடக் கண்டால், என்னவென்று கருதுவீர்கள்! கீழ்ப்பாக்கத்திலே இடமில்லையோ, என்று கேட்கமாட்டீர்களா? இதனைவிட ஆபாசமான மொழியன்றோ காந்தியாருடையது! நாடு, கேட்டு, நகைக்காமலிருக்கிறதே! நாடா இது? வீணரின் விளையாட்டுச்சாலை! ரசாபாசத்தின் மடம்! பித்தரின் சித்தக்கோயில்! மன்னார்சாமிகளின் மாளிகை! என்றன்றோ கூறவேண்டும்.

ஒரு நாட்டு விடுதலைக்கு இதுவரை, எந்தத்தலைவராவது, காந்தியார் இந்நாட்டு விடுதலைக்காகக்கூறிய விதமான விசித்திர யோசனைகள் போல் கூறினதாக சரிதம் உண்டா?

அமெரிக்க விடுதலைப் போரை நடத்திய வாஷிங்டன் என்ன, அடிமைகளின் விடுதலைப் போரைநடத்திய ஆபிரகாம் லின்கன் என்ன, பிரன்ச் மக்களின் பேதமையைப் போக்கப் போரிட்ட வால்டேர், ரூசோ, என்ன, இத்தாலியை விடுவித்த காரிபால்டி என்ன, ரஷியாவை விடுவித்த லெனின் என்ன, இன்னோரன்ன வீரர்களின் கதைகளைக்கேட்ட காதுகளில் இந்த வீணரின் கதையைக் கேட்கிறோமே! அறிவினாலும், ஆயுதத்தினாலும், நாடுகள் விடுதலை பெற்றன! அந்தராத்மாவும் மகாத்துமாவும் புகுந்து அணுவையும் அசைத்ததில்லை! பேனாவும்வாளும் பேதமையையும் அடிமைவாழ்வையும் போக்கின, தக்ளியும் ராட்டையும் அல்ல! எதிரியின்கால், உன் பிணத்தின் மீது நிற்கட்டும், உயிரிருக்கும் வரை விடாதே, போரிடு, என்றுரைத்தனர் வீரர்கள்! எதிரியின் ஈட்டி உன் மார்பில் பாயட்டும், முதுகில் வடுதோன்ற ஓடாதே, முன்னோர் பெயரைக் கெடுக்காதே என்றுகூறிய வீரர்கள் வாழ்ந்தனர், படித்திருக்கிறோம். தூக்கு மேடையிலும், "தொழ மாட்டேன் அன்னியன் அடியை" என்றுரைத்து, சிந்தும் இரத்தத்தைக் கண்டு சிரித்துச் செத்த சிங்கங்கள் உலவின உலகில், கேட்டுள்ளோம் அவர்களின் சரிதங்களை! இந்த அந்தராத்மாவின் தோழர், ஆரஞ்சுரசக்காரர் அடிக்கடி விடுக்கும் அதிசயமான போர் முறைகள், அவ்வப்போது அவலமாகியும், வெட்கமின்றி அவர் மீண்டும் மீண்டும் வீணான திட்டம் தயாரிப்பதும், அதைநடாத்த வீணர்கள் முன்வருவதுமாக இருக்கிறது, இந்த வீரமற்றவர்கள் நடமாடும் விந்தையான இடத்திலே!

### ஆடுராட்டே! சுழன்றாடு ராட்டே!

என்றார். ராட்டையின் ராகத்தைக் கேட்டு வெள்ளையர் பிடிப்பர் ஓட்டம், என்றார்! நடந்தது என்ன? சில காலத்துக்குப் பிறகு, ராட்டைகள் பரணை ஏறின!

கொளுத்து வெளி நாட்டுத் துணியை என்று கொக்கரித்தார். நடந்தது சின்னாட்கள்! பலன் பூஜ்யம்! பிர்லா, பஜாஜ் கம்பெனிக்கே அடித்தது யோகம்!

ஊராள்வோரை விரட்ட உப்புக் காய்ச்சும் போர் என்றுரைத்தார். வக்கீலும் டாக்டரும், வியாபாரியும் பிறரும், வேதியக் கூட்டத்தின் ஏவுதலால், விறகு எடுத்துக்கொண்டு, கடற் கரை சென்று, உப்பைக் காய்ச்சினர். "புறப்பட்டேன், வெற்றி இல்லையேல் என்பிணம், அரபிக் கடலிலே மிதக்கும்" என்று சூளுரைத்து, நொண்டிக் குதிரை, சண்டி மாடு, கொழுத்த ஆடு, கோணிப் பையில் நிலக் கடலை, நெற்றியிலே ரூபாய் அகலக் குங்குமப் பொட்டு, கையிலே ஆறடி தடியுடன் கிளம்பிய காந்தியார், அரபிக் கடலைக் கூட அணுக வில்லை! உப்புக் காய்ச்சிய உத்தமரில் சிலர், ஊர்ப் புறத்தே சிறையிலும், சிலர் உதை பட்டும், அடங்கினர்.

பட்டாளத்திலே சேராதே என்ற போர் நடத்தினார், பலன், ஊரெங்கும் பட்டாளமாகி விட்டது. போருக்குப் பணம் தராதே என்று கூவினார், பலன் கோடி கோடியாகக் குவிந்தது யுத்த நிதி!

இங்ஙனம், தான் வகுத்த ஒரு திட்டமாவது வெற்றிபெறாதது கண்டு, ரோஷமோ, வெட்கமோ கொண்டு, மூலையில் உட்கார்ந்து கொண்டிராமல், இதோ ஓர் புதுத்திட்டம் என்று கூறுகிறாரே காந்தியார், இவரை, என்னவென்று சொல்லி அழைப்பது தெரியவில்லையே! எங்கிருந்து ஊற்றுப்பெருக்கெடுத்தோடுகிறது இந்த உதவாக்கரை யோசனைகள்!

வெள்ளைக்காரர்கள் இந்நாட்டிலே இருப்பதற்குக்காரணம், இதுவரை, யாரும் அவர்களைப் போகச் சொல்லாததுதானா! இந்த 50 வருடங்களாகக் காங்கிரஸ் போட்ட கூச்சல், வெள்ளையரை விரட்டுவதற்குத் தானே! வெள்ளைக்காரரைப்பார்த்து, "போய்விடுங்கள்

11ம் பக்கம் பார்க்க

அறிவியற் பகுதி

# இந்துமதமுந் தமிழரும்

முன் தொடர்ச்சி.

[ நக்கீரன். ]

திருநாவுக்கரசர், "நினைந்துருகும் அடியாரை நைய வைத்தார்" என்ற சொற்றொடரை முதலடியாகக் கொண்டு பாடிய தேவாரத்தைத் "திருவடி என் தலைமேல் வைத்தார் நல்லூரெம் பெருமானார் நல்லவாறே" என்று முடித்திருக்கிறார். இதில், பேரன்பும் பேரிரக்கமும் வாய்ந்ததாகப் பேசப்படும் ஒரு கடவுள், தன்னை மெய்யன்போடு வழிபடும் அடியவர்களை நையப்புடைத்தல், கடவுள் இலக்கணத்திற்கே மாறுபட்டதென்பதை இதற்கு முன்னர் எழுதிய கட்டுரைகளில் நன்கு தெளிவுபடுத்தியுள்ளேன். எனவே, 'திருவடி என் தலைமேல் வைத்தார்" என்றசொற்றொடருக்கும் நேரானபொருள் என்னவென்றால், திருநாவுக்கரசருடைய தலையில் கடவுள் தனது காலால் உதைத்தார் என்பதேயாகும். ஆனால், கடவுள் திருநாவுக்கரசரை உதைத்தார் என்ற உண்மையை வெளிப்படையாகச் சொல்லாமல், திருவடி தலைமேல் வைத்தார் என்று கூறியது மதத்தலைவர்கள் கையாளும் சூழ்ச்சிகளில் ஒன்று. இல்லாத ஒன்றை இருப்பதாகச் சொல்லித் தங்கள் பிழைப்புக்கு ஆதரவுதேடிக் கொள்பவர்கள் எல்லாரும் இத்தகைய நயவஞ்சக முறையையே கையாள்வது வழக்கம். கடவுள், திருநாவுக்கரசரை உதைத்தார் என்று சொல்லுவதற்கும், கடவுள் தனது திருவடியை அவர் தலைமேல் வைத்தார் என்று சொல்லுவதற்கும் உள்ள வேறுபாடு, ஒருவனைப் பார்த்து 'இவன் மாடுபோல் இருக்கிறான்' என்பதற்கும், 'இவன் பசுப்போல் இருக்கிறான்' என்பதற்கும் உள்ள வேறுபாட்டையே ஒத்திருக்கிறது. எங்ஙனம், 'பசு' என்றாலும் 'மாடு' என்றாலும் ஒரு பொருளையே குறிக்குமோ, அங்ஙனமே, திருவடி தலைமேல் வைப்பதும், உதைப்பதும் ஒரு பொருளையே குறிக்கும் என்க.

இனித், திருநாவுக்கரசர் தாம் பார்ப்பனரால் அடைந்த துன்பங்களை வெளிப்படையாகச் சொல்லாமல் இங்ஙனம் மறைபொருளாக வைத்துக் கூறியதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று: ஒருவன் தனக்குச் செய்த துன்பத்தைப்பொறுத்து அவனுக்கு நன்மையையே செய்வதும், ஒருக்கால் அவன் செய்த துன்பத்தைப் பிறர்க்கெடுத்துச் சொல்லவேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டால், கேட்போர் உள்ளம் கொதிப்படையாமல் இருக்கும் முறையில் அந்நிகழ்ச்சியை அமைதிதரும் சொற்களால் அழகாகக்கூறி அதன் அடிப்படைப் பொருளை விளங்கவைப்பதும் தமிழ் மக்களுக்கு இயற்கையாகப் படிந்த குணங்களில் ஒன்றாகும். எனவே, திருநாவுக்கரசர் ஒரு உண்மைத் தமிழனாய் இருந்தமையால், தான் பார்ப்பனரால் அடைந்த துன்பங்கள் தன்னை மட்டும் பொறுத்ததாய் இல்லாமல், தன்னையொத்த தமிழ்மக்களையும் அத்துன்பங்கள் வருத்தி வதைக்கும் என்பதை நன்கறிந்தவராகையால், அவற்றைத் தன்னைமட்டும் குறித்தவை என்றெண்ணிப் பொறுத்துக்கொள்ளாமல், எல்லாத் தமிழ்மக்களும் பார்ப்பனக் கொடுமைகளை உணர்தல் பெரிதும் இன்றியமையாததென்று கருதிய நிலையில் இங்ஙனம் மறைபொருளாகவைத்துக்கூறியுள்ளார்.

**"ஆரியன் கண்டாய், தமிழன் கண்டாய்"** என்று ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே நமது நாவுக்கரசர் கூறியுள்ளார். ஆரியன் வேறு; தமிழன் வேறு என்ற கொள்கை தோன்றி ஆயிரமாண்டுகள் கழிந்தும், இன்றும் அதன் உண்மையை நம்மவர் உணரமுடியவில்லை என்றால், அதற்குக் காரணம்: நம்மையும் ஆரியரையும் ஒன்றாய்ப் பிணைத்துக் கொண்டிருக்கும் இவ்விந்து மதமே என்பதை எவர்தான் மறுக்கமுடியும்? இந்துமதத்தின்பேரால் எழுதப்பட்ட புராண இதிகாசங்களன்றோ ஆரியர்களைப் பூசுரராக்கித் தமிழ்மக்களை அவர்களுக்கு அடிமைகளாக்கிவிட்டன! இந்துமதத்தின் பேரால் உண்டாக்கப்பட்ட சட்டமன்றோ, ஒரு பார்ப்பனன் ஒருவனைக்கொலை செய்தால் அப்பார்ப்பனனுடைய தலையை மொட்டையடித்தால் போதுமென்றும், ஒரு தமிழன் ஒருவனைக் கொன்றுவிட்டால் அத்தமிழனைக் கொன்றுவிடவேண்டுமென்றும் கூறிக் குலத்துக்கொரு நீதி வகுத்துள்ளது! இந்துமதமன்றோ, தமிழனான திருநாவுக்கரசரை ஒரு கூலிக்காரன் நிலையில் வைத்து அவர்கையில் புற்பூண்டுகள் செதுக்கும் ஒரு உழவாரத்தைத் தாங்கும்படி செய்தது! இந்துமதமன்றோ, பார்ப்பனனான திருஞான சம்பந்தரை ஒரு சிற்றரசன் நிலையில் வைத்து அவன் பல்லக்கேறும்படி செய்தது! எனவே, ஆண்டிலும் அறிவிலும் முதிர்ந்த நாவுக்கரசர் பார்ப்பனரால் உதையுண்டதற்குக் காரணம், அவர் இந்துமதமாகிய சைவசமயத்தைத் தழுவியிருந்தமையே என்பதை ஈண்டுக்கூறாமல் இருக்கமுடியவில்லை. இன்றும்கூட, அறிவாற்றலிற் சிறந்துவிளங்கும் தமிழ் மக்களிற் பலர், ஆரியர்களின் அடிமைகளாக இருப்பதோடு, தாங்கள் சற்சூத்திரர் என்ற ஆரியக் கூற்றையும் ஒப்புக்கொண்டிருப்பது கண்கூடு.

இனித், திருநாவுக்கரசர் தாம் பார்ப்பனரால் அடைந்த துன்பங்களை வெளிப்படையாகக்கூற முடியாமற் போனதற்கு இன்னொரு காரணம் என்னவென்றால், அந்தக் காலத்தில் அன்பையும் அறிவையும் வளர்த்த சமணம் புத்தம் ஆகிய மதங்களை ஆரியர்கள் தங்கள் சூழ்ச்சியால் ஒழித்துக், கொலையும் கொடுமையும் நிறைந்த இந்துமதத்தைத் தமிழ் நாட்டில் பரப்பி அம்மதத்தையே அக்காலத் தமிழ்வேந்தரும் பின்பற்றும்படி செய்தமையேயாகும். 'அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி' என்றபடி, அக்கால அரசரின் ஆதரவையும் செல்வாக்கையும் பெற்றிருந்த ஆரியப்பார்ப்பனர், தங்கள் இந்துமதக் கொள்கைக்கு மாறாக நடப்பவர்களைத் தண்டிப்பதில் முழுஉரிமைபெற்றவர்களாய் இருந்தார்கள். எனவே, ஆரியப்பார்ப்பனரின் கொடுமைகளைக் கண்டு அவர்களைத் திருத்த முயன்ற திருநாவுக்கரசரைப் பார்ப்பனர் தங்கள் மனம்போல் உதைக்கவும் அடிக்கவும் ஏற்பட்டது ஒரு வியப்பல்ல.

இனித், திருநாவுக்கரசருக்கு ஏற்பட்ட துன்பங்கள் பார்ப்பனரால் ஏற்பட்டதல்ல வென்றும், சிவனே திருநாவுக்கரசரைத் தூய்மையாக்குவதன் பொருட்டுத் தம்முடைய திருவடியை அவர் தலைமேல் வைத்தார் என்றும் மக்கள் நம்பவேண்டுமென்பதற்காகவே கதையை இங்ஙனம் மாற்றி எழுதிவைத்தார்கள். அதோடு, திருநாவுக்கரசரைக் கொண்டே அதுகுறித்த பதிகமும் பாடும்படி செய்துவிட்டனர் அந்தப் பார்ப்பனர். என்றாலும், உண்மை நிகழ்ச்சி இதுவென்பதைக் காட்டாதொழிதல் ஒரு உண்மைத் தமிழனுக்கு முறையாகாதென்று எண்ணிய நாவுக்கரசர், பார்ப்பனர் தமக்குச் செய்த கொடுமைகளை இலைமறை காயாக அத்தேவாரப் பதிகத்தில் புகுத்தியுள்ளார். அரசன் ஆணைக்கும், ஆரியரின் கொடுமைக்கும் அஞ்சிய ஒரு தமிழன், தனது கொள்கைக்கு மாறாக நடக்குமாறு கட்டாயப்படுத்திய போதிலும், உண்மைக்கு அழிவு உண்டாகாத முறையில் நடந்துகொண்டதற்காக நாவுக்கரசரை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது.

(தொடரும்)

# தமிழா இது கேள்!

—(பாரதிதாசன்)—

இராகம்—தன்யாசி. பல்லவி. தாளம்—ஆதி.

தமிழனே இது கேளாய்—உன்பால்
சாற்ற நினைத்தேன் பலநாளாய்,

சரணங்கள்:

1. கமழும் உன் தமிழினை உயிரென ஓம்பு
காணும் பிற மொழிகளோ வெறும் வேம்பு
நமை யெலாம் வடமொழி தூக்கிடும் தாம்பு
நம் உரிமை தனைக் கடித்ததப் பாம்பு.

2. தனித் தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தின் தாய் மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு.

3. வஞ்சகர் வந்தவர் தமிழாற் செழித்தார்
வாழ்வினில் உயர்ந்தபின் தமிழையே பழித்தார்
நம்செயல் ஒழுக்கங்கள் பற்பல அழித்தார்
நாமுணர்ந்தோம் இந்நாள் அவரஞ்சி விழித்தார்.

4. தமிழரின் வாழ்க்கையின் முறையெலாம் புதுக்கித்
தடுத்திடும் பிறர்நய வஞ்சகம் ஒதுக்கி
நமக்குநாம் இறைஎன வானிலே செதுக்கி
நமதொற்றுமை நாட்டுவோம் மார்பினைப் பிதுக்கி.

## என்னைக் கேட்கிறார்கள்!

1. ஆச்சாரியார், பாகிஸ்தானை எதிர்த்து இதுவரை செய்துவந்த பிரசங்கங்களின் நகலையும், நமது தலையங்கங்களையும், மித்திரன் இந்துபத்திரிகைகள் இப்போது தீயிலிட்டு விட்டனவா?

2. காந்தியார், ஆச்சாரியாரிடம் அன்பு கொண்டிருப்பதால்தான், ஆச்சாரியாரைக் கண்டிக்காதிருக்கிறார் என்று காந்தியாரின் வார்சு, ஜவஹர், குறை கூறுகிறாரா?

3. குற்றாலத்திலே தோழர் சத்தியமூர்த்தி, ஆச்சாரியாரை எதிர்த்துப்பேச, புது பிரசங்கம் தயார் செய்கிறாரா?

4. ஆச்சாரியாரை ஆதரிக்கும்படி, தோழர் நாடிமுத்துப்பிள்ளைக்கு டாக்டர் சுப்பராயன் கடிதம் அனுப்பினாரா?

5. எவ்வளவு பணம் செலவானாலும் சரி, ஆச்சாரியாரை ஒருகைபார்த்து விடத்தான்வேண்டும் என்று தோழர் நாடிமுத்துப்பிள்ளை தீர்மானித்து விட்டாரா?

6. ஆச்சாரியாரை எதிர்த்தால், வெற்றிபெற முடியுமா என்று தோழர் முத்துரங்க முதலியார் ஜோதிடம் கேட்டதுண்டா?

7. ஆச்சாரியார் தீர்மானத்தை சட்டசபைக் கட்சிக்கூட்டத்திலே ஆதரித்த காஞ்சிபுரம் சேர்மன் டாக்டர் சீனுவாசன் அவர்கள், ஆச்சாரியாருடன் சேருவது ஆபத்து என்றும், தனது பந்துவான தோழர் சத்தியமூர்த்தியுடன் சேருவதே சிலாக்கியம் என்றும் கருதுகிறாரா?

8. "விடுதலை" பைண்டு வால்யூம் உடனே தேவை என்று, ஆச்சாரியாரும், கல்கி ஆசிரியரும், ஈரோடு விடுதலை ஆபீசுக்குக் கடிதம் எழுதினார்களா?

9. ஆச்சாரியார் இரண்டோர்மாதம் சுற்றுப்பயணம் செய்துவிட்டு, ஓரிசாவில் ஏற்படுத்தியதைப் போல, மந்திரிசபை ஏற்படுத்த முயற்சி செய்யப் போகிறார் என்பது உண்மையா?

10. காந்தியார், ஆறுமாதங்களுக்குப் பிறகு, அரவிந்த கோஷ்போல், ஒரு ஆசிரமம் அமைத்துக் கொண்டு யோகம் செய்யவா போகிறார்.? என்ற இன்னோரன்ன பலகேள்விகளை, நேயர்கள் என்னைக்கேட்கிறார்கள்! நான் என்னபதில் கூறுவது!!

## குடந்தையில் கலை விருந்து.

மதுரை திரு பால சண்முகானந்த நாடக சபையினர் கும்பகோணம் வாணி விலாச தியேட்டரில், தமது இனிய நாடகங்களை நடத்தி, ரசிகர்களுக்கு விருந்தூட்டி வருகின்றனர். தற்போது கிருஷ்ணலீலா நாடகம். விசேஷ சீன் ஜோடனைகள், ஹாஸ்யம், கானம், நடனம், சுவைமிக்க சம்பாஷணைகளுடன் நடைபெறுகிறது.

### தமிழ்த் திருமணம்

காலஞ்சென்ற திருப்பத்தூர் பழனிசாமி முதலியாரின் திருமகனார் திருமணம் 26ந் தேதி தோழர் C. N. அண்ணாதுரை தலைமையில் வடாற்காடு திருப்பத்தூரில் நடைபெறும்.

# ரோமாபுரி ராணிகளின் லீலா விநோதம்!

வீனஸ்

"ஓ! என் காவலரே' ஒன்றுக்கும் அஞ்சாதீர்! மாற்றாரின் கூர்வாள் என் மார்பினிலே பாயாது! தோற்றேன் நான் என்றாலும், மாற்று மருந்துண்பேன். நிதியும் நிலையும் குறைந்தது, மதிகுறைந்ததோ, இல்லை! எனவே நான், எதிரியிடம் சிக்கி, இன்னலுக்கும் இழிவுக்கும் ஆளாகி, இடருற்று, இறப்பதைவிட எதிரிக்கு என் பிணத்தையே பரிசளிப்பேன். என்னைப்பிடித்திழுத்து, இருப்புசங்கிலியால் பிணைத்துக்கட்டி, அவைநடுவே நிறுத்தி அவமானஞ் செய்வித்து, சிறைதனிலே தள்ளிச் சீரழித்து, நான் சித்திரவதைப் படுவதைக்கண்டு சிரித்திட எண்ணும், மாற்றாரின் கரம் தீண்டா முன்னம், இதோ இந்த நஞ்சைப்பருகிடுவேன், நானே மாள்வேன், நன்கு யோசித்தேன், நான் தற்கொலை செய்துகொள்வேன். ஊழியரே உருகாதீர், எனக்குற்றதுயர் கண்டு உள்ளம் பதைக்காதீர், ஊராளும் பேறு பெற்றேனில்லையென்றாலும், எதிரியிடம் உயிர் இழக்கும் இழுக்கைப் பெறேன், அதுபோதும். விடைதருவீர், விம்மாதீர், வீண் பீதிகொள்ளாதீர், மானம், மரணம் என்றிரண்டுண்டு கண்டீர், பின்னையதால் முன்னையதைப்பெறுவேன், போவீர்"

சுற்றிநிற்கும் வேலையாட்களிடம், இங்ஙனம் பேசுகிறான், சாபீனஸ் வேலையாட்கள் விம்முகின்றனர், வியர்க்கின்றனர். சாபீனஸ், தற்கொலை செய்துகொள்ளத் தீர்மானித்துவிட்டு, வேலையாட்களை அனுப்பிவிட்டான்.

பாரீர், சாபீன சின்மாளிகை தீக்கிரையாயிற்று! கேளீர் செய்தியை. செத்தான் சாபீனஸ். விஷங்குடித்தான், உயிர்விடுத்தான்.

சுந்தரவீடே அவனுக்குச் சுடுகாடாயிற்று.

தன்னைத்தானே தகனம் செய்துக்கொண்டான்.

சாபீனஸின் மாளிகை தீக்கிரையாயிற்று. விஷமருந்தி வீழ்ந்த சாபீனஸ், வீட்டையுங்கொளுத்திக்கொண்டான் என்று ரோம்மக்கள் கூறிக்கொண்டனர். சாபீனஸின் மனைவி ஈபோனியாவின் வீட்டிலே, அவள் கேட்டோர் மனம் உருகக்கதறினாள். "மாண்டாயோ மணவாளா! மனையே பிணஅறையாயிற்றே! ஏனோ உயிர் விட்டீர், என் நெஞ்சில் நெருப்பிட்டீர், தேனே தற்கொலை, தேறுதல்ஏதெனக்கு" என்று தேம்பினாள்.

ஊரெங்கும், சாபினசின் தற்கொலை பற்றியும், மாளிகை சாம்பலானது பற்றியும், மனைவியின் மனம் உடைந்தது பற்றியுமே பேச்சாக இருந்தது. "எமது எஜமான், எம்மிடம் ஏற்கனவே கூறிவிட்டார், உயிர் விடப்போவதாக" என்று கூறி, சாபினசின் சேவையிலிருந்தோர் சோகித்தனர். தன்மானத்தை இழக்காதிருக்கத் தற்கொலை செய்துகொண்ட கணவனை எண்ணி எண்ணி ஈபோனியா, கதறிக்கொண்டிருந்தாள். உற்றார் உறவினர், "தேம்பாதே மாதே!" என்று தேறுதல் கூறினர்.

**ஆனால் சாபீனஸ் இறக்கவில்லை!** அவனது மரணத்தைப்பற்றி ஊரும் ஊற்றாரும், மாற்றாரும் மனைவியும் பேசியபோது, அவன் அதேரோம் நகரில் இருந்தான். ஒன்பது ஆண்டுகளுக்குப்பிறகே அவன் உண்மையில் இறந்தான். அது வெஸ்பேசியன் மன்னனான போது! மணிமுடிமேல் ஆசைகொண்டு, ரோம் சாம்ராஜ்யத்திலே, புரட்சியும் சதியும் புரிந்தவர்களிலே, சாபீனஸ் ஒருவன்! இவன் ஓர் சாதாரணச்சீமான், ஆனால் என்னமோ, அரண்மனையளவு வளர்ந்தது. படையொன்று திரட்டினான், பாராள்வேன் என்றான், படுதோல்வி அடைந்தான். பின்னர், யோசித்தான். இனி இருத்தல் இம்சைக்கு இரையாதற்பொருட்டே, எனவே எதிரியிடம் தப்பிப்பிழைக்கத் தந்திரமே சரி என்று துணிந்தான். எனவே, விஷமுண்டு மாண்டுபோகத்தீர்மானித்ததாக, வேலையாட்களுக்குக் கூறினான். இரண்டுபேருக்குமட்டுமே உண்மையை உரைத்தான். மற்றவர் அவன் மாண்டானென்றே நம்பினர். மாளிகையையும் கொளுத்திவிட்டான். ஆனால், அவனது மாளிகையிலே இருந்தவோர் சுரங்கத்திலே சுகமாக இருந்தான். ஊரார் பேசுவதும், உற்றார் தேம்புவதும், மனைவி கதறுவதும், மாற்றார் சிரிப்பதும், தனது நம்பிக்கைக்குப்பாத்திரமான அந்த இருவேலையாட்கள் மூலம் தெரிந்துக்கொண்டான். நெடுநாட்கள் வரை, மனைவியும் நிஜமெதுவெனத்தெரியாது, விம்மினாள். பின்னர் வேலையாள் மெள்ளக்கூறினான் விஷயத்தை. கள்ளத்தனமாக, கணவனைச்சந்தித்தாள் மனைவி. குகையிலே அவர்கள் இரவிலே சந்திப்பர். பகலிலே விதவை! இரவிலோ பதியுடன் அளவளாவினாள்! பலநாட்கள், வருடங்கள், இது இரகசியமாக நடந்தது.

ஈபோனியா கர்ப்பவதியானாள்! கைபிசைந்துகொண்டாள், ஊரார்முன் எங்ஙனம் உலவமுடியும்! என்ன எண்ணுவர்! தந்திரம் இதற்கும் செய்தாள். உடல் வீங்கும் தைலமொன்று தருவித்தாள், பூசிக்கொண்டாள், பொம்மெனப்பருத்தாள், சூல்கொண்ட மாதெனப்பிறரறியாவண்ணம், உருவையே மாற்றிக்கொண்டாள். பிரசவ வேதனையைச் சகித்துக்கொண்டு, பிறர் அறியாதபடி ஏற்பாடுகள் செய்து இரட்டைக்குழந்தைகளைப் பெற்றெடுத்தாள். சாபீனஸ் இறந்தானென்று ரோம் எண்ணிக்கொண்டிருந்த நேரத்தில், சுரங்கத்திலே சுந்தரி ஈபோனாவுடனும், இருகுழந்தைகளுடனும், சர்பீனஸ் கொஞ்சிக்கிடந்தான். ஓராண்டு ஈராண்டல்ல, ஒன்பது ஆண்டுகள் இந்த இரகசிய ஏற்பாடு வெற்றிகரமாக நடந்து வந்தது.

ஆனால், மாலையிலே ஈபோனாவின் விதவைக் கோலத்தையும் பிளந்துகொண்டு களிப்பு பிறப்பதையும், அடிக்கடி அவள் வெளியே போவதையுங் கண்டவர்; இதிலேதோமர்மம் இருக்கவேண்டும் என்று சந்தேகித்தனர். ஒன்பதாண்டுகள் ஊரை ஏமாற்றினாள். ஆனால், கடைசியில், கண்டுபிடித்து விட்டனர். குகையிலே, கணவனும் இருமக்களும் இருந்தனர், அதுகாலை மன்னனாக இருந்த வெஸ்பேசியனின் செவிக்கு செய்தி எட்டிற்று. "பிடித்திழுத்துவா" என்றான். அரசனின் ஆட்கள், செத்ததாகக்கூறி ஊரை ஏய்த்த புரட்டனையும், கணவனுக்காகச்சூது நடாத்திய சுந்தர ஈபோனாவையும், அவர்களின் காதற்கனிகள் இரண்டையும், மன்னன்முன் கொண்டுவந்து நிறுத்தினர்.

"மன்னரே! மன்னித்தருளும்! மருட்சியால் என் கணவன், இங்ஙனம் தலைமறைந்து கிடந்தார். மணவாளனைக்காப்பாற்ற நானும் உடந்தையாக இருந்தேன். என் கணவன் எக்குற்றம் புரிந்தவரென்றபோதிலும், இந்த ஒன்பது ஆண்டுகள், இருந்தும் இறந்தவராக இருந்த தண்டனையே போதும். சுகமின்றி, சுற்றத்தார்பக்கமின்றி, வீடின்றி வேலையின்றி,

8ம் பக்கம் பார்க்க

தேவை.

மாதம் ரூ 25/-சம்பளத்தில் அனுபவமும் செல்வாக்கும் உடைய ஏஜண்டுகள் உடனே தேவை. மற்ற விபரங்களுக்கு 0-1-6 ஸ்டாம்பு அனுப்பித் தெரிந்து கொள்ளவும்.

காஞ்சி நிதி லிமிடெட்,
காஞ்சீபுரம்.

திராவிடநாடு

ஞாயிறு] 21—6—42 [காஞ்சி.

# இரண்டு மூளைகள்!

இருப்பது இரண்டு மூளைகள்! அதிலே ஒன்று உருகிவிட்டது, மற்றொன்று குழம்பிவிட்டது!! நிலைமை எப்படி என்பதை விளக்கவேண்டுமோ!

காங்கிரசிலே "பிரதான புருஷர்கள்" "ஜீகள்," இருவர். ஒருவர் காந்தியார், மற்றொருவர் ஆச்சாரியார். முன்னவருக்கு மூளை உருகிவிட்டது, மற்றவருக்குக் குழம்பிவிட்டது. நாமல்ல கூறுவது. இருவரையும் எத்தி எத்தித் தொழுதுவந்து, இதுபோது எடை போட்டுப்பார்த்து, திருச்செங்கோட்டாரைவிட வார்தாவாசியே கனமிக்கவர் என்று கண்டு அவர் காலடி தொழுவதே ஜென்மசாபல்யவழி என்று கருதும், எடு கூறுவதை நாம்எடுத்துரைத்தோம், புனைந்தோமில்லை.

**"இந்திய விடுதலைக்காக மகாத்மாகாந்தி இரவும் பகலும் தன் மூளையை உருக்கிக் கொண்டிருக்கிறார்."**

* * * *

**குழம்பியிருக்கும் அவருடைய (ஆச்சாரியாருடைய) நுண்ணறிவுக்கு இனித்தெளிவு கொடுக்கக் கூடியவை கீதையும் உபநிஷத்துக்களும் தான்"**

18—6—42ல் **பாரததேவி**, தீட்டியுள்ள தலையங்கத்திலே காணக்கிடைக்கும் தங்கமொழிகள். காந்தியாருக்கு மூளை உருகிக்கிடக்கிறது! ஆச்சாரியாருக்குக் குழம்பிவிட்டது!!

பரிதாபத்தைப் பாரீர், இருதலைவர்களுக்கு இக்கதி எனில், இதை எண்ணி எண்ணி ஏங்கும் தொண்டர்களின் துயரம், எப்படியிருக்கும்! அந்தோ அவர்கள் கதி என்ன! வார்தாமுனிவர், "போர்" என்கிறார், ஆச்சாரியார், "அமைதி" என்கிறார். முன்னவர் கருத்துக்கு முற்றிலும் மாறான கருத்துரை காட்டுகிறார், பின்னவர். சம்பந்திகளின் சமர், நகைச்சுவைக்கு நல்லதோர் எடுத்துக் காட்டாகிவிட்டது.

காந்தியாரின் புதுத்திட்டம் வெளிவந்ததும் ஆச்சாரியார் அதன் மண்டைமீது ஓங்கி அடித்துவிட்டார். கர்ந்தியார்மீது மட்டுமா அடிவிழுந்தது? காங்கிரசும் தப்பவில்லை!

**"காங்கிரசின் ஒரு கோஷத்துக்காகப் பணிந்து பிரிட்டிஷார் இந்த தேசத்தை விட்டு அகன்றுவிடுவார்களென்று தோன்றவில்லை."** என்று ஆச்சாரியார் கூறிவிட்டார். காங்கிரசின் குரலே இந்தியாவின் குரல் என்று கூவியவர்தான், என்றபோதிலும், நாட்டிலேஉள்ள நிலைமையை இனியும் மறைத்துப்பயனில்லை என்பதை உணர்ந்து, காங்கிரசின் ஒருகோஷம் கிளம்பிப் பயனில்லை என்று கூறிவிட்டார். ஆம்! இவரது கேளாக்காதையே, நமது இந்தி எதிர்ப்புக்கோஷம் துளைத்தது, பண்டித ஜவஹரின் காதையும் லீக் முரசு குடைந்தது, இனி மறைத்தால் பயனில்லை!

பிரிட்டிஷார் வாபிசானால், அந்த ஒவ்வொரு அங்குல நிலமும் ஜப்பானியாரிடம் பிடிபடும் என்று ஆச்சாரியார் கூறுகிறார். உண்மை!

நெடுநாட்களுக்குப் பிறகு உதித்த இந்த விளக்கம், ஆச்சாரியாருக்கு நின்று நிலைக்கவேண்டுமென்பதே நமது அவா!

காந்தியாரின் கருத்துகளுக்கு இதுவரை செவிலித்தாயாக இருந்துவந்த ஆச்சாரியார், இப்போது காந்தியாரின் கருத்து தொட்டிலிலிருக்கையிலேயே அதனைத் தொடமாட்டேன் என்று கூறிவிட்டு, தூரவிலகி விட்டார். தலைவர்களின் இந்தப்போக்கு, 'பாரததேவிக்கு,' புலம்பும் நிலைமையை உண்டாக்கி விட்டதைக்காண நாம் ஆச்சரியப்படவில்லை. 'தேவி'யின் துயர் விரைவில் துடைக்கப்படுமென்ற நம்பிக்கையும் நமக்கில்லை.

நிற்க, பொதுவாகக் காங்கிரசின் நிலைமை பரிதாபத்துக்கும் பரிகாசத்துக்கும் உரியதாக இருப்பதைக் கண்டும், அதில்இருந்து கொண்டுள்ள தோழர்கள் இனியேனும் "வாபசாகக் கூடாதா!" என்றுதான் நாம் கேட்கிறோம்!

தோழர் சுபாஷ் சந்திரபோஸ், காந்தியாரிடம் முரண்பட்டதும், ஆச்சாரியார், போசின்படகு ஓட்டைப் படகு என்றுரைத்து அதிலே ஏறாதீர் என்று எச்சரித்தார். இப்போது, காந்தியாரின் படகு, ஓட்டைப்படகு என்றுரைக்கிறார்! வாசகம் அதுவல்லவெனினும், கருத்துஅதுவே! ஆச்சாரியாரின் "படகோ," அடியிலே ஆயிரம்ஓட்டை என்று காந்தீயர்கள் கூறுகின்றனர். இந்த இரண்டும் வேண்டாம் தோழர்களே! சுயமரியாதைக் கொடி பறக்கும், நீதிக்கட்சியின் மரக்கலம், சண்டமாருதத்தையும் சமாளித்துக்கொண்டு சமதர்மபுரியை நோக்கிச் செல்கிறது, அதிலே வந்து சேருமின், என்று காங்கிரசிலே உள்ள தமிழரைக் கனிவுடன் அழைக்கிறோம்.

அரும்பு கோணிடினும் மணம் குன்றுதன்றோ! கரும்பு கோணிடினும், சுவை கோணுமோ! இரும்பு கோணியே யானையை அடக்கும் ஆயுதமாகமாறுகிறது. அதுபோல் நமது கட்சி விரிந்துபரந்த நிலையில் இல்லை எனினும் அதுகூறும் நீதி, நிலைத்தே நிற்கும். நிதி குறைந்திடினும், நமது நீதி குறையாது. நீளப்புகழ் பரப்பி, நெடுமரத்தில் கொடிகட்டி, நிகர் இல்லைஎன்று நிகண்டு நீட்டிடினும், நீதிமறக்கும் கட்சி, நின்றசுவர் மாரியில் சரிந்து வீழ்வதேபோல், சடுதியில் சாய்ந்தே தீரும். ஜாரின் கட்சி, எவ்வளவுபெரிய கோட்டை கட்டிக்கொண்டிருந்தது. தங்கத்தால் கோட்டை கட்டி, வைரத்தால் வாயலமைத்து, அதை எதிர்த்தெவரும் வாராதபடி, சுற்றிலும் ஆத்திகமெனும் ஆழிஅமைத்து மதக்குருமார்களெனும் முதலைகளை அதிலே வளர்த்து, கோட்டைமீது பரம்பரை எனும் கொடிமரத்திலே, படாடோபம் எனும் கொடியைப்பறக்கவிட்டு, பார்ப்போர் கண்கூசும் பளபளப்புடன், கேட்போர் செவிசிதறும் அட்டகாசத்துடன், ஆண்ட ஜார், பகல் பட்டினிகளால், பஞ்சைப் பனாதிகளால், நொந்த உள்ளத்தவரால், தாக்குண்டு தகர்ந்து தரைமீதுருண்டது, புராணமல்ல, சரிதம்! சரிதம் சாற்றும் பாடத்தைச் சற்றே செவிமடுப்பீர், சாயும் உமது முயல்போக்கு,

சீறிஎழும், ரோஷமும், வீரமும், ஆவேசமும், ஆண்மையும். உம்மைநீர் உணர்வீர், உலகில் உமைத்தடுப்பார் இரார், இஃது உண்மை!

"சம்புவே என்ன புத்தி சலந்தனில் மீனைநம்பி
வம்புறு வடத்தைப்போட்டு வானத்தைப்
பார்ப்பதேனோ?
அம்புவி மாதேகேளாய் அரசனை அகலவிட்டு
வம்பனைக் கைபிடித்த வாறு போலாயிற்றன்றே!"

மீன் துள்ளி விளையாடுகிறது, நரியின் நாக்கு துடிக்கிறது, அந்தத் துடிப்பிலே தன்னை மறந்ததுநரி, வாயிலிருந்த இறைச்சித்துண்டு ஆற்றிலே வீழ்ந்து போயிற்று. அதேநேரத்தில் மீனும், பாய்ந்தோடிவிட்டது உள்ளதும் போயிற்றே என்று நரி வானத்தை நோக்கிற்றும் வாட்டத்தோடு!

இதைக்கண்ட கன்னியொருவள், சம்புவே இதென்ன புத்தி? என்று கேட்டாளாம். அவள் விஷயம் நரிக்குத்தெரியும்! எனவே நரி "இது தெரியவில்லையா! மன்னனைவிட்டுப் பிரிந்து வம்பனை இழுத்துக்கொண்டு நீதிரிகிறாயே, அது போன்றதே" என்றுரைத்ததாம். அவள் அரசனைப் பிரிந்து கசடன்பின் செல்பவள்! வேடிக்கையான இக்கதையைக்கூறி பாடம் புகட்டும் பாடல், விளக்கும் நிலைபோன்றுளது காங்கிரசிலே இன்று!

"ஐயா! ஆச்சாரியாரே! இதுஎன்னபுத்தி? இருந்த மந்திரிவேலையை, எங்கேயோ இருக்கும், வைசிராய் நிர்வாக சபை வேலையை மனதில் எண்ணிக்கொண்டு இழந்துவிட்டு, இன்று இரண்டுமின்றி ஏங்குகிறீரே" என்று மௌலானா அபுல்கலாம் ஆசாத்கேட்க ஆச்சாரியார், "இதுதெரிய வில்லையா மௌலானாஜீ! நீர் உமது இஸ்லாமிய சமூகத்தைவிட்டுப் பிரிந்து, காங்கிரஸ் கூட்டத்தில் கலந்துவிட்டு, இன்று அந்தக்கூட்டத்திலே பலரே இஸ்லாமியரின் இலட்சியத்தை ஆதரிக்கத் தொடங்கியதால் இரண்டுங்கெட்டு இருக்கிறீரே, அது போன்றுதான்" என்று பதில் கூறுவதுமான, நிலைமை இருக்கிறது. நன்று, நன்று, இவர்தம் நிலைமை! நாட்டுக்கு நாயகம், என்றுரைத்தனரே இந்த ரசாபாச நடன சாலையை! காண்மின், ஆங்குநடைபெறும், காட்சிகளை! இனியும் இந்தக் கூட்டத்திலே இருப்பதோ, இக்கூட்டத்தில் ஒரு பகுதியையோ, பிறிதொன்றையோ நம்புவதோ, நன்மை பயக்குமா பயக்காதா என்பது கிடக்கட்டும், நமது தன்மானத்துக்கு இது காப்பா, மூப்பா என்பதனைச்சிந்தித்துப்பாருங்கள் என்று கேட்டுக்கொள்ளுகிறோம். மிகமுக்கியமான சமயங்களிலே, காங்கிரசில்நட்பு முறிவதும் நயவஞ்சகமும் சகஜமாகி விட்டது. நெருக்கடியான நேரத்திலே குரு சிட சம்வாதம் சந்தைக்கடைச் சந்தடியையும் மிஞ்சிடக் காண்கிறோம்.

இந்நிலையில், நமது கட்சியினர், காங்கிரசின் கோளாறான காட்சியை எடுத்துக்காட்டி, தமிழரை அதனின்றும் பிரித்து, நீதிக்கட்சியில் வருமாறு அழைக்கும் பணியை ஆற்றவேண்டும் என்பதேநமது அபிப்பிராயம். ஆச்சாரியாரின் ஆதரவு, பாகிஸ்தானுக்கும், திராவிடஸ்தானுக்கும் கிடைக்கிறதென்று நாம் பூரிக்கத் தேவையில்லை.

நாட்டிலே, பிரிவினைக்கோர்கட்சி, அதை எதிர்க்க மற்றோர் கட்சி என்று அமையுமேல், ஆச்சாரியார், காங்கிரசைக் கைகழுவி விட்டு, பிரிவினைகோரும் கட்சியில் சேருவதாக இருப்பின், அதுபோது, அவர் நம் ஆதரவுக்கும் அன்புக்கும் பாத்திரமாவார். இதுபோது அவரது நிலைமை, அதுவல்ல.

நாம் ஜனநாயக வாதிகள், காங்கிரசோ பாசிச மனப்பான்மை கொண்டதென நாம் பன்னெடு நாட்களாகக் கூறிவந்துள்ளோம். இதே கருத்துடன் முன்னம் காங்கிரசிலே, தோழர்கள் நரிமன், கரே, ஆகியோர், போரிட்டனர். அதுபோது நாம் அவர்களின் வாதங்களையும், அவர்கள் காங்கிரசின் கோளாறை விளக்கினதையும் எடுத்துரைத்து, "இதுதான் காங்கிரசின் இலட்சணம்" என்று இடித்துரைத்து வந்தோமே யன்றி, நரிமனைத் தழுவினோமில்லை, கரேயிடம் கைகுலுக்கிக் கொள்ளவில்லை. அந்தப்போக்கே இச் சந்தர்ப்பத்திற்கும் ஏற்றது என்பதோடு, அத்தகைய போக்கினால் மட்டுமே, காங்கிரசின் யோக்யதையை வெளிப்படுத்தவும், அவ்விதம் வெளிப்படுத்துவதன் மூலம், அதிலிருக்கும் நமது தமிழ்த்தோழர்களை நமது பாதைக்குத் திருப்பவும் வழியாகுமென்றேநாம் கருதுகிறோம். இந்தப் போக்கின்றி, ஆச்சாரியாரை நாம் நமது அன்பர் எனக் கொள்வது, காங்கிரசின் அவலட்சணத்தை அறிந்து அதைவிட்டு நீங்கவேண்டுமென்று கருதும் தோழர்களையும், இனியும் அங்கேயே இருக்கும்படி செய்வதாக முடியுமென்பது மட்டுமல்ல, நம்மவரில் சிலரைப்பலி கொடுத்துவிடவேண்டி நேரிட்டுவிடவுங்கூடும் என்று நாம் அஞ்சுகிறோம்.

அவசர ஆனந்தமடைவோர் பின்னர் கைபிசைந்துக்கொள்ள நேரிடும் என்று நாம் முன்புகூறினோம்,

ஜனாப் ஜின்னாவின் ஆதரவில் நடப்பதும், முஸ்லீம் லீக்கின் முரசுமான **DAWN** டான், 14-6-42ல் இதே கருத்தைத் தலையங்கத்திலே தீட்டியிருப்பது கண்டு, மிக மகிழ்கிறோம்.

டான் எழுதுகிறது "முஸ்லீம்களிலே ஒருசாரார் எளிதிலே எதிலும் திருப்தி அடைந்துவிடும் வாடிக்கைக்காரர்களாக உள்ளனர். பாகிஸ்தானை இந்துபிரசாரம் பலமாக எதிர்த்தபோது இந்த வகையினர்பீதி கொண்டு விட்டனர்.

பிறகு பாகிஸ்தான் பிரேமை இஸ்லாமியரிடையே அமோகமாயிற்று. உடனே இவர்கள் தமது சந்தேகத்தைத் துடைத்துக்கொண்டனர்.

"சிலகாலம் சென்றதும், தோழர் ராஜகோபாலாச்சாரியாருடைய சென்னைத் தீர்மானம் வெளிவந்தது. பாகிஸ்தான் தந்தாகவேண்டும் என்று அதன் மூலம் அவர் தெரிவித்தார். இது (எளிதாகத்திருப்தி அடைகிற) அவர்கள் எதிர்பார்த்ததைவிட அதிகம். எனவே அவர்கள் தோழர் ராஜகோபாலாச்சாரியாரை, தமது வீரர் என்று வாழ்த்தலாயினர். திடீரென தோழர் ராஜகோபாலாச்சாரியார் மனம்மாறி, பாகிஸ்தான் ஆதரவாளராகி விட்டார் என்று அவர்கள் எண்ணினர். ஆனால், அது மனமாற்றமல்ல. அரசியல் சாணக்கியமே யாகும். ஓராண்டுக்கு முன்பும் தோழர் ராஜகோபாலாச்சாரியார், இந்துமகாசபைத்தலைவர்கள்போன்றே பாகிஸ்தானை எதிர்த்தார். பசுவை வெட்டுவது போன்றது பாகிஸ்தான் என்று கூறும் அளவுக்கு இருந்தார். அவர் இப்போது தீரமாக இருப்பதை அறிவாளிகள் போற்றவேண்டுமென்பதில் சந்தேகமில்லை, ஆனால், இது நமது பிரச்சினையைத் தீர்த்துவிட்டதாகாது. நமது இலட்சியம் இன்னொருவரின் உதவியாலோ ஆதரவாலோ, கைகூடும் என்று கருதுவது, கானல் நீர் வேட்டையாகவே முடியும். நமது முயற்சி, தியாகத்தால் மட்டுமே நாம் நமது இலட்சியத்தை சித்தியாக்க முடியும்.

ஆரம்பத்திலே இந்துஎதிர்ப் பிரசாரத்தைக் கண்டு, பயந்தது கோழைத்தனம். அதுபோலவே, இப்போது நமது உரிமையை தோழர் ராஜகோபாலாச்சாரியார் ஆதரிக்கிறார் ஆகவே பாகிஸ்தான் நமக்குக் கிடைத்துவிட்ட மாதிரிதான் என்று ஆனந்தப்படுவதும் அர்த்தமற்ற ஆபாசமாகும். பிரமாதமான நம்பிக்கையும், **அவசர ஆனந்தமும், நம்மை வழிதவறிவிடச் செய்யும்.**

நமது சக்தி, நமது அறிவு, நமக்குத் துணையாகுமேயன்றி, இன்னொருவரின் உதவிக்கரம் நமக்கு வெற்றி அளிக்காது!!

டாக்டர் கருத்தைப் போன்றதே நாம் தொடர்ச்சியாக இந்தப்பிரச்சினைபற்றி எழுதுகையில் வெளியிட்டுள்ள கருத்தும்.

நாடறியா நடராஜன், நமது தமிழ் காக்க காமுழைப்போம் என்றுகூறி, நடந்தான் சிறைச்சாலை நோக்கி! நன்றே செய்தாய், சுகமே போய்வா, என்றுரைத்தார் தந்தை. பாழுஞ்சிறையிலே படுத்த படுக்கையிலே, பைந்தமிழ் வீரன் நோயுற்று நொந்தான். மரணம்நேர்வந்து நின்று, அணைத்தது. மணம் வீசும் புகழுடன் மைந்தன் வருவானென்று, மாடியில்லா மண்வீட்டில், மகிழ்விலாத வயோதிகர் காத்துக் கிடக்கையிலே, பிணம் வந்துசேர்ந்தது! தமிழரின் கண்களிலே வெள்ளம் புரண்டோடி வழிந்தது.

தீரன் தாலமுத்து தீந்தமிழைத்தாக்க ஒரு தில்லுமொழி துணிந்ததா என்றுரைத்து நுழைந்தான் சிறைக்குள், பிணந்தானே வெளியே வீசப் பட்டது! இளமையிலே, "இன்னல்கண்ட, அவன்மனைவி, இனி உலகே எனக்கோர் சிறை, என்று சோகித்து அறுக்கெதறிந்த தாலியைத் தன் திருக்கண்ணீரால் அபிஷேகித்து, அவர் சென்றிருந்த சிறையிலே நான் நின்று தவங்கிடப்பேன் என்றுரைத்து ஏகினரே!

மாதரும் சிறையோ! மக்களும் சிறையோ, மகனுக்கும் அதுவேதானோ! என்று துடித்தனவே தமிழரின் குடும்பங்கள்.

புதுச்சேரித் தேங்காய் பூக்காது காய்க்காது என்று புண்பட்ட தமிழரிடை புகன்றாரே முதன் மந்திரியார்.

அறுபதாண்டுப் பெரியாரை அக்கினிக்குப் பரிசளிக்க, பெல்லாரி அனுப்பினர், அண்ணல் பன்னீர்ச் செல்வம், "ஆகுமோ" என்று கேட்க, "வெப்பம் இருந்து" என்றுரைத்தாரே, பாராளும் மண்டபத்தில். பதைத்த மக்களைப் பார்த்து பார்ப்பன மந்திரியார் "பாலருக்குப் பால்வேண்டி பாவையர் சிறைபுகுந்தார்" என்றுரைத்து எள்ளனம் செய்தாரே. இருபத்தி ஏழு மாதங்களிலே, ஆச்சாரியார் தமிழருக்கிழைத்த இன்னல்களை, நாம் மறக்கினும், நாமறக்க மறுக்குதே நாவடக்கினும், நமது நெஞ்சு பொங்குதே! துயர் முந்துதே! எங்ஙனம் அவருடன் தோழமை கொள்வோம்? ஏன் அத் தோழமை!

அவர் தமது பழய கருத்தைப் படுகுழியிலிட்டாரா! பார்ப்பனவேடத்தை மாற்றிக் கொண்டாரா? பதைத்த தமிழருக்குப் பரிகாரம் தருவாரா! தாலமுத்துவின் மனைவியின் தாலி, அறுந்தது, அதன் முன்னிலையில், நாமும் அவரும், தழுவிக் கொண்டு நிற்பதா!

தமிழரின் ஆதரவோ, தோழமையோ அவருக்குத் தேவை என்றால், தமது ஆட்சிக்காலத்தவறைத் தாம் உணர்ந்ததாக, தமிழருக்கிழைத்த தீங்குகளுக்காகத் தாம் மனம் வருந்துவதாக, ஆச்சாரியார் ஒரு அறிக்கை வெளியிடட்டும், கொட்டு முழக்குடன் கூடுவோம் அவருடன். இல்லையேல், அவர் வேறு, நாம் வேறு, இடையே இடப்படும் பாலம், நிற்காது, நிலைக்காது!

ரோமாபுரி ராணிகள் 5ம் பக்கத் தொடர்ச்சி.

காற்றடித்தாலும், கண்டு கொண்டுவருபவரின் காலடிச் சத்தமோ என்று கலங்கி வாழ்ந்தார், இதைவிடக்கொடுமையான தண்டனை, கொற்றவனே! உண்டோ!' என்று ஈபோனு புலம்பினள், வாதாடினள். மன்னன் மமதையின் மடியில்கிடந்தான், மாதின் மொழிகேட்க மறுத்தான்.

"உன்கணவன் செய்தது ஒரு குற்றமா, இரண்டு. புரட்சிசெய்தான் ஊரையும் ஏய்த்தான். எனவே அவன் உயிர்போகத் தண்டனைதரலே முறை! ஒன்பதாண்டுகளுக்குமுன்பே ஒழிந்தான் என்று ஊர்நாடுகூறி விட்டது, இனியும் இவன் இருப்பானேன்." என்றான். சாபீனஸ், கொலைக்களத்தில் உயிர் விட்டான்.

இவ்வளவு நெஞ்சிறக்கமற்ற வெஸ்பேசியன் மன்னனாக இருந்த வரலாறு விந்தையே!

வினான் விட்டலியஸ் விருந்துண்டு கிடக்கையில் வெஸ்பேசியன் என்பான், அவனை வீழ்த்திய வரலாறு முன்னம் கூறினோம். வெஸ்பேசியன், விருதுடன், அரசவைபுகுந்தான். கிளாடியஸ் மன்னனானகாலத்திலே வெஸ்பேசியன் காடாண்டான்! அதுகாலை அவன் மனைவி டோமிடில்லா துணைநின்றாள். அவன் மன்னனானபோது மாதவள் இல்லை—இறந்துபோனாள். கோலாகலக்குலுக்கிகளும், கொடுங்கோன்மைக் காரர்களும் கூத்தாடிய ரோம் சாம்ராஜ்யத்தில், சிற்சில சமயங்களிலே; சேற்றில் முளைத்த செந்தாமரைபோல், சீரும் சற்குணமும் கொண்ட மங்கையர்க்கரசிகள் உதித்தனர். ஆனால் அவர்கள் ஆடம்பர ஆரத்தின் நடுநாயகமாகவோ, கவிகளின் கற்பனைக்குக் காட்சியாகவோ, ஓவியக்காரரின் தீட்டுகோல் காட்டுமிடமாகவோ இருந்ததில்லை.

தோள்வலியும் வாள்வலியுந்தரும் அரசே, மக்களின் மனக்கனல் பட்டுக் கருகிற்றென்றால், சூதுச்சூலில் தோன்றி, வஞ்சனைத் தொட்டிலில் ஆடி, சூழ்ச்சிப்பள்ளிப்பயின்று, கெடுமதியுடன் தோழமை கொண்டுலவியவரின் அரசு, அழிலனத் தழைக்க மார்க்கமுண்டோ. தலைவலிதீர மருந்துண்டு, குலைவலி கண்ட கதைபோலாயிற்று, வினான் விட்டலியஸ் வீழ வெஸ்பேசியனை ரோம்மக்கள் ஆதரித்த செயல். விட்டிலியசை வீழ்த்திய வெஸ்பேசியன், முடிதரித்ததும், மக்களைக்கொடுமைப்படுத்துவதிலே மடியின்றி உழைத்து, தடிகொண்டு கனியைத்தாக்கிடும் திருடன்போல், வரிகொண்டும் வாள்கொண்டும், நரிக்குறி கொண்டவரின் துணைகொண்டும், கரிகரும்புக்கழனி நுழைந்ததுபோல், மக்களை அழித்தான். இறந்துபட்ட தன் மனைவி டோமிடில்லாவுக்கு, கோயில்கள் கட்டினான். மானே! மரகதமணியே! தேனே, என் உயிர் நீதானே! என்று தன் பழயகாதலி சீனஸ் என்பாளுடன் கொஞ்சிக்குலவினான். அந்த வஞ்சியோ, தஞ்சமடைவோரைத்தவிற மற்றவரைப் பஞ்செனமதித்து, அரசன் ஆணையை ஏவி அவர்களை அவதியில் ஆழ்த்தினள். எதற்கும்வரி! வரிமேல்வரி! கொள்ளைமேல் கொள்ளை! கொடுமையின் எல்லையைக்காணவே அரசுரிமை கிடைத்ததெனக் கோமான் கருதினன் போலும். அவனடியில் ரோம் சிக்கிச்சிலகாலம் சிதைந்தது!

## பன்னீர் செல்வம் உதயம்

காஞ்சி, பிள்ளையார்பாளையம் புதுப்பாளையத்தெரு திரு. சிவக்கொழுந்து முதலியார் தமக்குதித்த ஆண்குழந்தைக்குப் பன்னீர்செல்வம் எனப்பெயரிட்டு, திராவிட நாடு பத்திரிகை வளர்ச்சிக்கு 8 அணா அனுப்புவித்தார்.

## பிரபல திருமணம்.

விருதுநகர் தோழர். வி. வி. தனுஷ்கோடி பி. ஏ. அவர்கள் மகள் செல்வி கனகரத்தினத்துக்கும் அவ்வூர் தோழர் எம். கருப்பைய நாடார் மகன் செல்வன் முனிதுரை பாண்டியனுக்கும் நாளது 28—6—42ந் தேதி ஞாயிற்றுக்கிழமை விருதுநகரில் திருமணம் நடைபெறும்.

# குமஸ்தாவின் பெண்தான்

அல்லது

# கொலைகாரியின் குறிப்புகள்.

—— சௌமியன் ——

முன்பு:—

[ஆரம்பக் காதல் முறிந்து, விதவைக்கோலத்திலே விபசாரியாகி, பின்னர் பழைய காதலனை மீண்டும் சந்தித்த காந்தா, அவனிடம் சரசமாடிக் காலந்தள்ளுகிறாள், அது இது.]

சோமுவும் நானும், மிக்க சல்லாபத்தோடு சில நாட்களை உதகமண்டலத்தில் இருக்க முடிந்தது. மைசூர் ரேசுக்குச் சென்றிருந்த மிராசுதாரர் பலத்த நஷ்டத்துடன், உதகைவந்தார். சென்னைக்குப் பயணமானோம். சோமு, கியோ மோட்டார் கம்பெனியின் சென்னை ஆபீசுக்கு வேலையை மாற்றிக்கொண்டு சென்னைவந்து சேர இரண்டுமாதங்களாயின. அதுவரை, எங்களின் இன்பக் கணைகளாகக் கடிதங்கள் இருந்தன. காதல் சுவை சொட்டச் சொட்டக் கடிதம் எழுதுவார் சோமு. நானும் என்மனமகிழ்ச்சியை அவருக்குத் தெரிவிப்பேன். இருவரும் ஆவலோடு ஒருவரை ஒருவர் ஆலிங்கனம் செய்து கொள்ளும் நாளும் வந்தது.

சோமுவின் வரலாற்றைக்கூறமறந்துவிட்டேனே. அடைந்த ஆனந்தத்தில் அதை மறந்தேன். என்னை வெறுத்து,வேதாந்தத்தைத்துணைக்கழைத்துக்கொண்டு தீர்த்தயாத்திரைக்குக் கிளம்பின சோமு, மோட்டார் ஏஜண்டாகி, மோகனுஸ்திரத்தால் தாக்கப்பட்டு என்னை வந்தடைவதற்கு முன்னால், பரம்பொருளை நாடி, பல பல குருமாரை அடுத்தாராம். வேதாந்தம், சித்தாந்தம் பயின்றாராம், பூசைகள் பலப்பல செய்தாராம். ஒவ்வொரு குருவும் ஒவ்வோர்விதமான வழிகாட்டினார்களாம். ஆண்டவனைக் காண ஒவ்வொரு வழியும் ஒவ்வொரு ஆயிர ரூபாயை விழுங்கிற்றேயொழிய, ஆண்டவ தரிசனம், ஆலயத்தில் காண்பதோடு நின்றுவிட்டதாம். லோகமே மாயை, வாழ்வே அநித்தியம்என்று போதித்த குருமார்கள், ரொக்கத்தைப் பற்றி அக்கரை கொண்டதையும், ஒரு பூசாமுறையை மற்றோர் பூசா முறைக்காரர் குறைகூறுவதையும், ஒரு தத்துவத்தைக் குறைக்கூறி மற்றோர் தத்துவத்தை ஒருவர் போதிப்பதையும், எல்லாத் தத்துவக்காரரும், பணத்தினிடம் மட்டும் பரமபக்திகொண்டிருப்பதையும்,சோமு தெரிந்துகொள்ள நெடுநாட்கள் பிடித்தனவாம். அனுமத் உபவாசிகளாம், மாகாளியைக் கூப்பிட்டபோது வரவழைக்கும் மகா மந்திரவாதிகளாம், தேவியை பிரசன்னமாக்கும் பேர்வழிகளாம், மற்றும் யாராரோ, சோமுவுக்கு இருந்த மதப்பித்தை சாக்காகவைத்துக் கோண்டமட்டில் கொள்ளையிட்டுக் கொழுத்தார்களாம். பணம் குறையக் குறைய, தாயின் திட்டு அதிகரித்ததாம். இவரின் புத்தியும் துலங்கிற்றும். பிறகுதான், வடநாட்டில் உள்ள ஒரு வக்கீலின் மகளை மணந்துகொண்டு வாழ்க்கையை நடத்தலானார். தாயும் காலமானார்கள். பம்பாயில் மோட்டார் கம்பெனி ஒன்றில் வேலைக்கு அமர்ந்தார். அதன் உதகை பிரான்சுக்கு, சீசனுக்காக, தன்மனைவியுடன் வந்திருந்தபோதுதான் என்னைக் கண்டார்.

சென்னையில் சோமு வந்தபிறகு, மிராசுதாரர் கண்களுக்குத் தெரியாதபடிதான் எங்கள் சந்திப்பும் சல்லாபமும் இருந்துவந்தன. ஆனால் நாங்கள் மிராசுதாரரின் கண்களை ஏய்த்தோமே தவிர, காதை அடைத்து வைக்கமுடியுமா, ஊரின் வாயைத்தான் மூடமுடியுமா. மிராசுதாரர், அடிக்கடி, என்னிடம் உறுமத்தொடங்கினார். சோமுவிடம் கூறும்போதெல்லாம், "கிடக்கிறான் தள்ளு. நான் பார்த்துக்கொள்கிறேன்" என்று தைரிய மூட்டலானார். மிராசுதாரர், என்மீது கொண்டிருந்த ஆசை, இந்த வதந்தியால் மட்டும் குறைந்துவிட்டதாகக் கூறுவதற்கில்லை. அவருடைய பொக்கிஷமும் வரண்டு வரத்தொடங்கிற்று. ஆகவே, சோமுவிடம் நான் காசு எதிர்பார்த்து நேசங்கொள்ளவில்லை என்றபோதிலும், அவராகப்பணம் தரும்போது வேண்டாமென்று கூறிவிட மனம் வரவில்லை. உருக்குவின் தோடும்தொங்கட்டமும், நோட்டும் ரூபாயுமாக மாறின. அவளது தங்கச் சங்கிலியும் தாழம்பூ வளையலும், என்னிடம் பண ரூபத்திலே வந்தன. இவைகளை, சோமு கூறவில்லை. நான் கேள்விப்பட்டது. தனது மனைவியிடம் தொந்தரவுசெய்து, நகைகளைக் கழற்றி விற்று எனக்குப்பணம் தருவதாகக் கூறச் சோமு எப்படிச் சம்மதிப்பார். நான் கேட்கும் போதெல்லாம், இந்த மாதத்தில் கமிஷன் அதிகம் கிடைத்தது என்று பொய் கூறுவார். உருக்கு-அவரது மனைவி—நான் இருந்திருக்கவேண்டிய இடத்தில்வந்து நின்றவள்—நகைகளை மட்டுமா இழந்தாள், தன் நாயகனின் நேசத்தையே இழந்தாள். பாவம், கலங்கியிருப்பாள், கதறியிருப்பாள். நான் என்னசெய்வது? நான் வாழவேண்டுமானால், இதைக்கவனித்தாலா முடியும்? பிறர் அழ அழ, தான்வாழும் பேர்வழி உலகில் நான் ஒருவள்தானா? வட்டிக்கடைக்காரர்கள் வாழ்கிறார்களே, நான் மட்டும் ஏன் வீண்வேதாந்தம் படித்து பாழ்படவேண்டும். ஒருவர் வாழ, மற்றொருவர் பாழாகவேண்டுமா என்று என்னைக் கேட்டால், கூடாது என்றுதான் சொல்லுவேன். ஆனால் நீவாழ்வது அவ்விதமாக இருக்கிறதே. "உருக்கு தன் கணவனைப்பிரிந்து அழுகிறாளே, நகைகள் போய்விட்டன என்று நொந்து கொள்கிறாளே, சம்பளத்தைக்கூடச் சரியாகக் கொடுப்பதில்லை என்று சலித்துக்கொள்கிறாளே. அவளுடைய கஷ்டத்துக்கு நீதானே காரணம். அவள் அழ அழ, நீசிரித்துக்கொண்டு சிங்காரியாகவாழுகிறாயே தகுமா" என்று கேட்பீர்கள். நான் சொல்கிறேன், "தகாதுதான், ஆனால் என்னைக்கேட்கிறீர்களே, மற்றவர்களைக் கேட்பதுதானே. பலருடைய சிங்கார வாழ்வு இவ்விதமாகத்தானே இருக்கிறது. என்னைப்போல் இன்பத்தை விற்பவரைத்தானே குறை கூறுகிறீர்கள். இதையும் கொடாது எய்த்துப் பிழைக்கும் பேர்வழிகள், ஏழைகளின் ஏமாளித்தனத்தைத் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு சொகுசாக வாழுவோர், இல்லையா? இதோ, என் மிராசுதாரரின் வாழ்வு இன்பமயம், அவரது பண்ணையாள் பகல் பட்டினி. இதையும் கேளுங்கள். இத்தகைய முறையே கூடாது என்று சொல்லுங்கள். உலகத்தை ஒழுங்காக அமைத்துவிடுங்கள். நான் மட்டுமா? எய்த்துப் பிழைக்கும் எவருக்கும் இடமில்லாதபடி செய்து விடுங்கள். அது நல்லது என்பேன். என்னைமட்டும் கண்டித்துவிட்டு, பிறரைச் சும்மா விட்டுவிடுவதென்றால், அது தகாது.

என்னுடைய டாம்பீக வாழ்வுக்கு ஏற்ற விதமாக நடந்துகொள்ள சோமு முயன்றதில் அபாரமான செலவு ஏற்பட்டுக்கொண்டே வந்தது. வேலையும் போயிற்று. வேறுவேலைக்குச் செல்லவில்லை. தானே, யாரையோ பிடித்து, ஒருமோட்டார் ஏஜன்சி எடுத்தார். அதற்கு, பாக்கி இருந்த நகைகள் அடகு. பாவம்! தனது நிலையை மட்டும் என்னிடம் காட்டிக்

கொள்வதில்லை. சோமு மட்டுமா? மிராசுதாரரே சற்று அடங்கிக்கிடந்தார். அவருக்கும் வரட்சி. ஆகவே, சோமு விஷயமாக கண்டுங் காணுது இருந்துவிட்டார். இவ்விதமாகவே மூன்ருண்டுகளுக்கு மேல் நடந்து வந்தது.

சோமு, என் ஆசை நாயகனுக இருக்கவேண்டி, சூதும் வஞ்சனையும், பொய்யும் நிறைந்த நடத்தை களைச்செய்து வந்து, அதிக பழக்கமாகிவிட்டது. என் பழக்கம் அதிகமாகவாக, புளிப்பேறப்பட்டுவிட்டது. யாரோ லிலி என்ற ஆங்கிலோ இந்திய லேடியாம். வயது அவனைவிட அதிகமாகவே இருக்கும். அவளைப் பிடித்துக்கொண்டு ஆடத்தொடங்கினுன். என் காதுக்கு இது முதன் முதல் எட்டியபோது, நான் கண்டித்தேன். இனி என்வீட்டு வாயற்படி ஏறக்கூடாது என்றேன், "இல்லை கண்ணே! வியாபாரசம்பந்தமாக அவளிடம் பழகினேன். உன்னை நான் விடுவேனே, மறப்பேனே," என்று கொஞ்சினுன். ஆனல் காரியம் மிஞ்சிக்கொண்டே வந்தது. சோமுவின் நடத்தையை மிராசுதாரரே எனக்கு எடுத்துக்கூறி, எச்சரித்து வந்தார். சோமுவின் கெட்டகுணம் தெரிந்தால், நான் அவனை விட்டுவிடுவேன், தனக்கே முழுச்சொந்தம் ஏற்படும் என்று மிராசுதாரர் எண்ணினர்.

"காந்தா! கைசலிக்காது தானே உனக்கு நான் பணம் கொடுத்தேன். கடைசியில் துரோகம் தானே செய்தாய்"

"துரோகமென்ன செய்தேன். நமது குடும்பச்செலவுக்கு ஏற்றபடி உம்மால் பணம்தர முடியவில்லை. ஏதோ பாலிய சினேகமாயிற்றே என்று சோமுவைக்கேட்டேன். அவர் ஏதோ கொடுத்து வருகிருர். அதனுல்தானே காலந்தள்ள முடிகிறது. உமது வருவாய் குறைந்துவிட்டது என்பதற்காக எந்தச் செலவைக்குறைத்துக்கொள்ள முடிகிறது?"

"முடியுமா? முடியாதுதான்! பிறந்ததுமுதல் பணத்திலேயே புரண்டவள்"

"போதும் நிறுத்துங்கள். பிறக்கும்போது யாரும் தங்கக் கவசத்தோடு பிறப்பதில்லை. கஷ்டப்பட்டுக் கொண்டுதான் இருந்தேன். உம்மையார், என்னை இழுத்து இப்படி. செலவிட்டு வாழும் வாழ்க்கையில் கொண்டுவரச்சொன்னது?"

"சரியான கேள்வி."

"நன்ருக வாழ்ந்துகொண்டிருந்தவள், திடீரென்று எப்படி வாழ்க்கையை மாற்றிக்கொள்வது. நாலுபேர் கைதட்டிக் கேலிசெய்யமாட்டார்களா? உங்களுக்குத் தானே அது கேவலம். மிராசுதாரர்பாடு தீர்ந்துவிட்டது, காந்தாபாடு காய்ந்துவிட்டது என்று கூறுவார்களே. அந்தக்குறை வராமல்பார்த்துக் கொள்கிறேனே யொழிய எனக்கென்ன உம்மீது ஆசை குறைந்துவிட்டதா? சோமுமீது ஆசைபுரண்டோடுகிறதா?"

"ஆசை இல்லாமல்தானு, அவன் பேருக்கு உயில் எழுதியிருக்கிருய்?"

"உயில் எழுதினேனு?" நானு?

'உயிலென்ருல் உயிலேதானு? உன்பேருக்கு20000 ரூபாய்க்கு இன்ஷியூர் செய்திருக்கிருயே, அது நீ இறந்துவிட்டால் அவனுக்குத்தானே போய்ச்சேர வேண்டுமென்று எழுதியிருக்கிருய்."

"அப்பா! அதையா சொன்னீர்கள். அதற்குப் பணம் அவரே கட்டுகிருர். வந்தால் அவரே எடுத்துக்கொள்கிருர். நமக்கு என்ன அதிலே நஷ்டம்?"

"ரொம்ப நியாயந்தான்"

'சரி! சரி! பேச்சைநிறுத்தும். என் இஷ்டம்'

"ஆமாம்! உன் இஷ்டந்தான், உன் இஷ்டப்படி தான் காரியம் நடக்கிறது. நடக்கட்டும், நீ அவனைநம்பிக்கொண்டு இரு. அவன் லிலியை இழுத்துககொண்டு திரியட்டும்,"

லிலியோடாவது திரியட்டும், ரோசோடாவது அலையட்டும், எனக்கென்ன? நான் எப்படி அவரைக் கட்டுப்படுத்த முடியும். நான் உன்னைப்பிரிய இசைகிறேனு? அதுபோல் அவருக்கும் நான் மட்டும் போதவில்லை. அலையட்டுமே,"

"அலையட்டும், தொலையட்டும், உன் உயிரையும் போக்கட்டும், எனக்கென்ன?"

"என் உயிரைப் போக்கத்தான் நீங்கள் உதித்தீர்களே. அவர் என் போக்குகிருர்"

"ஏனு? உன் உயிர்போனுல் எனக்கா 20,000 ரூபாய் வரப்போகிறது!" என்று மிராசுதாரர் கேட்டார். இந்தச் சம்பாஷணை எனக்குச் சஞ்சலத்தையும் திகிலையும் உண்டாக்கிற்று. என் உயிருக்கே ஆபத்து வருமோ என்று அஞ்சினேன். [தொடரும்]

பாரதிதாசன்

இயற்றிய

புரட்சிக்கவி.

கற்பனையும், கவிதாலங்காரமும், புரட்சிக் கருத்துகளும், பொங்கும் காதலும், பொலிவுற விளங்கும் இந்த தேன்மொழி ஏடு, உங்களைக் களிப்புக்கடலில் தள்ளும்!

அமுதவல்லியின் அழகொளி, உதாரனின் காதல், அரசனின் ஆர்ப்பரிப்பு, கொலைகளக் காட்சி, குடியரசு அமைப்பு எனப் பலப்பல சட்டங்கள் இதில் உள்ளன. 0—2—6 அணு ஸ்டாம்பு அனுப்பினுல் 1-பிரதி அனுப்பப்பெறும். கைவசமிருக்கும் காபிகள் 20!

உடனே தேவைக்கு எழுதுக.

திராவிடநாடு நிலையம்.
சின்ன காஞ்சிபுரம்.

## புதிய யோசனை.

நமது இயக்கத்தினரோ. பொதுவாகவே பார்ப்பனரல்லாதாரோ, பார்ப்பனரைக் கொண்டு. தமது வீட்டில் திருமணம் நடத்தினுல். அதே தேதியில், மேற்படி திருமணம் நடைபெறும் இல்லத்துக்கு அருகாமையில். தமிழ்த்திருமணத்திற்கு ஏற்பாடு செய்து, பல தலைவர்களும் அதில் கலந்து கொண்டு சீர்திருத்தம் பற்றி சொற்பொழிவுகள் நிகழ்த்தி, தமிழ்த் திருமணம் செய்யாது பார்ப்பனீயத் திருமணம் செய்பவருக்குத் தன்மானம் வரும்படி செய்ய வேண்டுமென்றும் காஞ்சிபுரத்தைப் பொறுத்த மட்டில், இனி இத்தகைய வழியைக் கையாளத்தாம் திட்டம் தயாரித்து வருவதாகவும், தோழர் A. K. தங்கவேலர், நமக்குத் தெரிவிக்கிருர். அன்பரின் யோசனை பற்றித் தோழர்கள் யோசிக்கக் கோருகிரும்.

## திராவிட நாடு பிரிவினைக் கமிட்டி கூட்டம்.

அடுத்த மாதத்தில் காஞ்சீபுரத்தில். திராவிட நாடு பிரிவினை கமிட்டிக் கூட்டம், விசேஷ நிலைமையைப் பரிசீலனை செய்யவும். வேலைத் திட்டம் வகுக்கவும், காஞ்சீபுரத்தில் கூட்ட ஏற்பாடுகள் நடைபெறுகின்றன! என்று காரியதரிசி தெரிவிக்கிருர்.

காஞ்சியில் முன்பு நடைபெற்ற முதல் பிரிவினை மாநாட்டின் போது நிறுவப்பட்ட, நிரந்தரக் கமிட்டி மெம்பர்கள் தங்கள் கருத்தைத்தெரிவிக்க வேண்டுகிரும்.

புதுப் போர் ஆரம்பம் 2ம் பக்கத் தொடர்ச்சி

## டோஜோவும் காந்தியும்!
## வயோதிக வஸ்தாத்!
## மன்னார்சாமி மயக்கம்!

வெளியே'' என்று கூறிடும் புத்தி, திடீரென்று இப்போது தோன்றிடக்காரணம் என்ன? இதுவரை செய்தவைகள் புத்தியற்றவையா? இவைகளுக்குப் பதில் கூறக் காந்தியார் கடமைப்பட்டவர். அவர் பேச்சை நம்பும் பேர்வழிகளும் கடமைப்பட்டவர்கள்! பதில் கூறுவார்களா?

என்ன நடக்கும் இந்தப்போரிலே! மிஸ்டர் ஸ்மித் மோட்டாரிலே வெகுவேகமாகப் போய்க்கொண்டிருப்பார். ஒரு காந்திபக்தர் கடைவீதி வழியே நின்றுகொண்டு, வழிமறிப்பார். மோட்டார் நின்றதும் அவர், கும்பிட்டுக்கொண்டே,

"மிஸ்டர், உங்கள் ஊருக்கு நீங்கள் போய்விடுங்கள்'' என்று கூறுவார்.

விகடந்தெரிந்த வெள்ளையராக இருந்தால், "ஆகா! வேலைமுடிந்ததும் போய்விடுகிறேன்'' என்று கூறிவிட்டுப்போவார்.

* * * * *

காங்கிரஸ் தொண்டர் கந்தசாமி, நேற்று மாலை, ஒரு வெள்ளையரைக் கும்பிட்டுச் சத்தியாக்கிரகம் செய்கையில், கூட்டம் சேரவே, வண்டிப்போக்குவரத்தைத் தடைசெய்ததற்காக, மேற்படி தொண்டர்மீது நியூசென்ஸ் குற்றப்படி, வழக்குத் தொடரப்பட்டு, ஒருவாரம் தண்டிக்கப்பட்டார்.

* * * * *

தமிழே தெரியாத வெள்ளையர் முன், இங்கிலீஷே தெரியாத ஒருகாங்கிரஸ் தொண்டர், காந்தித் திட்டப்படி, "இந்தியாவைவிட்டுப் போய்விடு'' என்று தமிழிலே கூற, வெள்ளைக்காரர் விஷயம் தெரியாது, ஏதோ பிச்சைகேட்கிறான் என்று எண்ணிக்கொண்டு ஒரு அணா எடுத்துக்கொடுத்தார். தொண்டர் அதை எடுத்துக்கொண்டு தாகசாந்தி செய்யச்சென்றார்.

* * * * *

பண்டிதஜவகர் இன்று ஐக்கியமாகாணக்கவர்னரைப்பார்த்து, "ஊருக்குபோங்கள்'' என்று காந்தியார் கட்டளைப்படி கூறினார், கவர்னர் சிரித்துவிட்டு. "வேறு கவர்னர் நியமனமானதும் போவதாகத்தான் உத்தேசம்'' என்று கூறினாராம்.

* * * * *

இன்று ஓர் காங்கிரஸ்தொண்டர், ஒரு வெள்ளைக்காரரை வழிமறித்து, "போ உன் ஊருக்கு'' என்று சொல்ல, அவர் மணிபர்சை அபகரிக்கவே இந்தச் சூழ்ச்சி நடக்கிறது என்றுகருதி, கன்னத்திலே ஒரு அறைதர, தொண்டர் கதற, போலீசார்வந்து தொண்டரை அழைத்துச்சென்றனர்.

* * * * *

திருமதி சீதாதேவி என்ற காங்கிரஸ் பெண்மணி, மிஸ்டர் பிரவுன்துரையைக்கண்டு புன் சிரிப்புடன், "உங்கள் ஊருக்குப்போய் விடுங்கள்'' என்றுகூற, மிஸ்டர் பிரவுன். "வழிதெரியவில்லை!மறந்துவிட்டேன். கூட துணைக்குவருகிறாயா?'' என்று கேட்க, இந்தப் புதுப்பிரச்னையைத் தீர்த்துவைக்கும்படி, சீதாதேவி காந்தியாருக்குக் கடிதம் எழுதினார்களாம்.

* * * * *

இத்தகைய ரசங்கள், நடக்கக்கூடும், காந்தியாரின் போர் நடத்தப்பட்டால்! வேறு என்ன நடக்கும்? வெள்ளையர்கள் போயாவிடுவார்கள்?

பலிக்காது என்று தெரிந்தும் இத்தகைய திட்டத்தைக் காந்தியார் தயாரிப்பதன் கருத்து என்ன? சிங்கப்பூரைச் சிதைத்து, மலேயாவை வீழ்த்தி, பர்மாவைப் படு சூரணமாக்கி, அந்தமானைப் பிடித்துக்கொண்டு, சிலோன் மீது குண்டு வீசி, விசாகை காகிநாடா ஆகிய இடங்களிலேயும் அசாமிலும் குண்டு வீசி, எப்போது பாயலாம் இந்தியாமீது என்று எண்ணிக் கொண்டிருக்கும் ஜப்பானியர், இந்நாட்டிலே, ஏராளமான பிரிட்டிஷ், அமெரிக்கத் துருப்புகள், பலமான முஸ்தீப்புடன், தக்க தளவாடங்களுடன் இருப்பதை உணர்ந்து, "உள்ளே நுழைந்தால் உருப்படமாட்டோம்'' என்று ஏங்குகின்றனர். உள் நாட்டிலே குழப்பம் விளைந்தால், ஒரு கை பார்க்கலாம் என்பது அவர்களின் எண்ணம். அவர்களுக்குத் துணை செய்வதைத்தவிர, காந்தியாரின் திட்டத்துக்கு வேறு கருத்து இருக்கமுடியுமா என்று யோசித்துப் பாருங்கள்! ஜெனரல் டோஜோவின் பேச்சை ஒட்டியதாக இந்தப் பிரச்சாரம் இருக்கவில்லையா! "வெள்ளைக் காரரை, உங்கள் நாட்டை விட்டு விரட்டுங்கள்'' என்று டோக்கியோ கூறுவதைக் கேட்டு, துவக்கப்படும் போரன்றோ இது? காந்தியார், ஜப்பானின் பஞ்சாங்கப்படை திரட்ட முனைகிறாரா என்று கேட்கிறேன்.

சீனாவிலே எந்த வெள்ளைக்கார ஆட்சி இருந்தது? ஏன் அதனை ஜப்பானியர் இன்னமும் சிதைக்கின்றனர்? தாய்லந்து சுயராஜ்யமாகத்தானே இருந்தது, அங்கு ஏன் பாய்ந்தது ஜப்பான்? இந்தியாவில் வெள்ளையர் இருப்பதால்தான் ஜப்பானியர் வருவதாக உள்ளனர் என்று கூறுவது எவ்வளவு மடத்தனம் என்று யோசித்துப் பாருங்கள். ரஷியாவிலே யார் இருக்கிறார்கள்? ஏன் ஹிட்லர் அங்கே பாய்கிறான்? பெல்ஜியத்திலே பிரிட்டிஷ் ஆட்சி இல்லையே! அதை ஏன் பொசுக்கினான் ஹிட்லர்? இவைகளைக் கண்ட பிறகு, இங்கே வெள்ளையர் இருப்பதால்தான் ஜப்பான் பாய எண்ணுகிறது என்று பாமரரிடம் கூறுவது எவ்வளவு போக்கிரித்தனம் யோசியுங்கள்.

"எனக்கு ஆயுதம் கொடு! ஆள் கொடு! இரண்டாம் போர் முனை ஏற்படுத்து'; என்று சீனாவும் ரஷியாவும், பிரிட்டனையும், அமெரிக்காவையும் கெஞ்சுகின்றன! இந்நிலையிலே இந்தியாவுக்கு, ஏராளமான பிரிட்டிஷ் அமெரிக்கத் துருப்புகள், காவல்புரிந்து நாட்டை ஜப்பானியர் பிடிக்க வொட்டாது தடுக்க மனமுவந்து வந்துள்ளனர், அவர்களை, 'உங்கள் ஊருக்குப் போய் விடுங்கள்'' என்று கூறுவது பேதமையும் போக்கிரித்தனமும் கலந்ததல்லவா! தீப்பிடித் தெரியும் வீட்டிலே, தண்ணீரை ஊற்றி அணைக்க வருபவனை, உன் வீட்டுக்குப் போ'' என்றுகூறினால், அந்த வீட்டுக்காரனை, வீரனென்றா கூறுவார்கள்! "அட! புத்தி கெட்டவனே! உன் வீட்டைக் காப்பாற்ற வந்தால், உளறுகிறாயே'' என்று கேட்க மாட்டார்களா?

* * * * *

"ஆழமான குளம்! இறங்காதே அபாயம்!'' என்று எச்சரிக்கிறான் ஒருவன். மற்றவன், "சமுத்திரம் எனக்கு முழங்கால் அளவு! சத்தமிடாதே! தடாகத்திலே இருக்கும் என் தேவி தூங்குகிறாள். விழித்துக் கொள்வாள்'' என்று கூறுகிறான். "என்ன தம்பி! ஏதோ பித்தம்பிடித்துப் பேசுகிறாய்! தடாகத்திலே தேவியா!'' என்று எச்சரித்தவன் கேட்கிறான்.

"ஆமாம்! உனக்கென்ன தெரியும்? நீபோ உன் வேலையைப் பார்த்துக்கொண்டு'' என்று கூறிக்கொண்டே குளத்திலே குதிக்கிறான். நாலைந்து பேராகப் பிடித்திழுத்து வருகிறார்கள்.

"போய்விட்டாளே! போனாளே!'' என்று அவன் புலம்புகிறான். எச்சரித்த தோழனை நோக்கி மற்றவர், "இது ஒரு பைத்தியம்! காளிபூஜை செய்து மூளை கலங்கிவிட்டது. இப்படித்தான் குளத்தைக்கண்டால் குளறும்'' என்று விஷயத்தை விளக்குகின்றனர்.

குடியன், பித்தன் ஆகியோருக்கு வருகிற ஆபத்து இன்னதெனத் தெரியவில்லை. இந்த சபர்மதி சித்தருக்கும் நாட்டுக்கு வந்துள்ள ஆபத்து தெரியவில்லையோ என்று கேட்க, இந்நாட்டிலே ஆளில்லையா? விவேகமும் வீரமும் கொண்ட புருஷர்கள் இங்கில்லையா? முகஸ்துதி செய்யாது, உண்மைபேசி உலுத்தரை அடக்கும் உத்தமர்கள் கிடையாதா இந்த நாட்டில்? இது என்ன கபோதிகள் உலவும் காடா?

* * * * *

கட்டுதளராது, கன்னத்தில் குழிவிழாது, கைகால் நடுங்காது, கவர்ச்சியுடன் இருந்த காலத்திலே கண்டோரை மயக்கியவள், உடல் உருகி, கண்ணொளிமங்கி, கன்னம் குழிவிழுந்து விட்டபிறகு, கைதட்டிக் கூப்பிட்டாலும், கண்டோர் நகைப்பராம்! அதுபோல், காந்தியாரின் போர்த்திட்டங்கள், முதன் முதல் போடப்பட்டபோது, அதன் புதுமைகண்டு மயங்கினர் பலர். இப்போது அவரது திட்டங்கள் வயோதிகமாதுக்குச் சமம்! வருந்தி அழைத்தாலும் வாரார் எவரும்! இருந்தாலும், வாழவேண்டுமே என்று வர்ணம்பூசி வாயற்படியிலே நின்று, வருவோர் போவோரை அழைக்கும் கிழட்டுப்பேர் வழிபோல், காந்தியார் தமது திட்டங்கள் தகர்ந்து, சீடர்கள் சிதறி, ஆசிரமம் அழகு குறைந்து போனபிறகும், தமது "மகாத்மா" பட்டம் இருக்கிறதே என்ற எண்ணத்தால், மற்றோர் திட்டம் தயாரித்திருக்கிறார். மன்னார்சாமிகள் இதனையும் "மகாபெரிய மேதாவித்திட்டம்" என்று கூறுவர். மதியை மறந்தோருக்குப் பஞ்சமா, பாதகண்டத்திலே? இன்று நேற்று, மதிகெட்டது? பல நூற்றாண்டுகளாகி விட்டனவே! மதம் மாய்த்ததே மதியை! மக்களுக்கு மகாத்துமா சொல்வதிலே மயக்கம் ஏற்படுவதிலே ஆச்சரியமென்ன! ஆனால் ஒன்று. இரும்பைப்போன்ற உடல்வலிவு பெற்று இறுமாந்து, ஈடு எதிர் இல்லைஎன்று கூவி, எதிர்த்தோரைத்தாக்கி, முதல் நம்பர் வஸ்தாத் என்ற பெயரெடுத்தவன், குடியாலும் சேட்டையாலும் உடலைக் கெடுத்துக்கொண்டு, புல்தடுக்கினாலும் பூமியில்விழும் நிலைபெற்ற பிறகு, தன்னிடம் "வேலை" கற்றுக்கொண்டவர்கள், வெற்றி மாலையும், வீரகண்டாமணியும் பரிசு பெற்று வீதிவலம் வருவதுகண்டால், "கிடக்கிறான் நம்மபயல்! நான் கத்துக்கொடுத்த வித்தை" என்று கூறி, மீசையிருந்த இடத்தைத் தடவிப் பார்த்துக் கொண்டிருப்பான். தளர்ந்த உடலுடன் புத்தியும் தளர்ந்துவிட்ட வஸ்தாதாக இருந்தால், சீடர்களுடன் சண்டையிட்டு அவர்கள் வேறு காதாவுக்குப் போன பிறகு, ஆதரிப்பாரற்று அவதிப்படுவான்.

காந்தியாரின் வார்தா கூட்டம், இன்று இந்நிலை அடைந்துவிட்டது. காந்தியாரின் கரம் இளைத்து விட்டது! அவரது பிரதம சீடர் ஆச்சாரியாரே, வெளியேறி விட்டார். ஆச்சாரியாருடன், விவாதிக்கமாட்டேன் என்று கூறிவிடவேண்டிய அளவு காந்தியாருக்கு உடலிலும் உள்ளத்திலும் தளர்ச்சி உண்டாகி விட்டது. இந்தநிலையிலே புதுப்போராம்! வீரன்,

புத்திக்கும் யுக்திக்கும் புரிந்திடும்
சக்திக்கும் ஜயத்துக்கும் கசந்திடும்
புதுப்போர் ஆரம்பமாம்—என்றுபாடியது பொருந்தத்தானே, கூறுங்கள் தோழர்களே!

"தையலை இராத்திரிக்குள்
சந்திக்க வில்லையானால்,
மெய்யெங்கே? உயிர் தானெங்கே?
வெடுக்கென்று பிரிந்துபோகும்"

கேட்டீர்களா! அவளைக் காணவிட்டால் அவன்
உயிரே போய் விடுமாமே! அந்தக் காதல்

எதிர்பாராதமுத்தம்
தந்தது!

இன்பக் கேணியில்
இடறி வீழ்ந்தான்!

*

தேனும் முக்கனிச் சாறும் கலந்தது.
தீந் தமிழ்க் கவிதை.

*

எதிர்பாராதமுத்தம்!

பூங்கோதை
மீது இத்தகைய காதல்
கொண்டான்
பொன் முடி!

காதலுக்கிடையே சுடுங்
காற்று வீசுகிறது!
குடும்பவிரோதம்!
எனவே,

எதிர்பாராத
முத்தம்!



காதலையும் வீரத்தையும்
தீட்டுவதில்
தன்னிகர்யாரும்
இல்லா
தமிழரின்
புரட்சிக் கவி
பாரதிதாசன்
தீட்டியது.

எதிர்பாராத
முத்தம்!

விலை 0—8—0
போஸ்டேஜ் 0—1—0.

'வானம்பாடி' நிலையம்,
சின்ன காஞ்சீபுரம்.

Printed at the United Printing Works, Hodgsonpet Conjeeveram.
and Published by C. N. Annadurai, M. A at 51 Nimanthakara Street, L. Conjeeveram.